# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்

## நிகழ்நிலைப் பரீட்சை - 4

## வினாத்தாள் I

| சுட்டெண் :- ..... | தரம் - 5 | நேரம் 1 மணித்தியாலம் |
|---|---|---|

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்.

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்கான அறிவுறுத்தல்கள்.

- உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே தருக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் கீழே தரப்பட்டுள்ள மூன்று விடைகளிலிருந்து சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க்கோடிடுக.

## விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்


| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் | |
| இறுதிப்புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |


| | பெயரும் ஒப்பமும் |
|---|---|
| முதலாவது பரீட்சகர்<br>புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்படுள்ளது. என உறுதிப்படுத்துகின்றேன். | .....<br>பெயர்<br>.....<br>ஒப்பம் |
| இரண்டாவது பரீட்சகர்<br>முதலாவது பரீட்கரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | .....<br>ஒப்பம் |
| மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்<br>மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | .....<br>பெயர்<br>.....<br>ஒப்பம் |
| அதிபர்<br>மேற்பார்வை செய்தேன் | |
| வலய/மாகாண மேற்பார்வையாளர் | |

www.ikeou.lk


- *1, 2* ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியை தெரிவு செய்க.

*1.*






1)



2)



3)

*2.*





1)




2)




3)


*3.* *3, 4* ஆகிய வினாக்களில் தரப்பட்ட உருக்களில் இரண்டு ஒத்தவை அந்த இரண்டு உருக்களும் யாவை?



P




Q




R

*1)* P உம் R உம் *2)* P உம் Q உம் *3)* Q உம் R உம்


*4.*



A



B



C

*1)* A உம் C உம் *2)* B உம் C உம் *3)* A உம் B உம்

- **5ஆம், 6ஆம் வினாக்களுக்கு ஒன்றோடு ஒன்று தொடர்பு இல்லாத சொற்கள், உருக்கள் இடம் பெறும் அடைப்பைத் தெரிவு செய்க.**

*5.*

| |
|---|
| பங்கயம் |
| கமலம் |
| அம்புயம் |

1)

| |
|---|
| செம்மை |
| கருமை |
| பசுமை |


2)

| |
|---|
| நீதிபதி |
| மேசை |
| நம்பி |


3)

www.ikeau.lk

6.



1)



2)



3)

- தரப்பட்டவற்றிடையே மூன்றை ஒரு கூட்டமாகவும் இரண்டை வேறொரு கூட்டமாகவும் ஆக்கலாம். அவற்றில் இரண்டு இருக்கும் கூட்டத்திற்கு உரியவை யாவை ?

7. மணியாசு, கைக்குட்டை, மூக்குக்கண்ணாடி, மண்வெட்டி, பற்றூரிகை.


**(1)** பற்றூரிகை, மணியாசு

**(2)** மண்வெட்டி, மணியாசு

**(3)** கைக்குட்டை, பற்றூரிகை

8. சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட வாக்கியத்தைத் தெரிவு செய்க.
   1) எங்கள் மாணவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காகச் சமூகமளிப்பார்கள்.
   2) எங்கல் மாணவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காகச் சமூகமளிப்பார்கள்.
   3) எங்கள் மாணவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காகச் சமுகமளிப்பார்கள்.

9.




உருவை முறிகோடு வழியாக மடித்துப் புள்ளிக்கோடு வழியாக வெட்டினால் கிடைக்கும் முக்கோணிகளின் எண்ணிக்கை.
   1) 6
   2) 4
   3) 8

10. "எந்தத் தொழிலிலும் போட்டித்தன்மை இருந்தால் உயர்வு அடையலாம்" என்னும் கருத்தை உணர்த்தும் பழமொழி
   1) எலி வளையானாலும் தனிவளை வேண்டும்.
   2) முயற்சி திருவினையாக்கும்
   3) கீரைக்கடைக்கும் எதிர்க்கடை வேண்டும்.

11. பின்வரும் விழாக்கள் கொண்டாப்படும் கால எண்ணிக்கையின் அடிப்படையில் ஒழுங்குபடுத்தும் போது கிடைக்கும் விடை எது?

| | | |
|---|---|---|
| A – அமுதவிழா | C – பவளவிழா | E – வெள்ளிவிழா |
| B – பொன்விழா | D – வைரவிழா | |
| 1) B E D C A | 2) E B D C A | 3) E B C A D |

12. ஒருவன் 15789 என்பதை X T Z A L என்று எழுதுகிறான். 2 3 4 6 என்பதை NPSU என்று எழுதுகிறான் எனின் 2 3 5 4 0 என்பதை எப்படி எழுதுவான்?

| | | |
|---|---|---|
| 1) N P T S R | 2) N P T S L | 3) N T S L R |

www.lkedu.lk

**13.** ஒரு கூண்டில் குரங்குகள் சிலவும் கிளிகள் சிலவும் இருந்தன. அவற்றின் தலைகளை எண்ணினால் 20 வருகிறது. கால்களை எண்ணினால் 48 வருகிறது. அப்படியானால் அங்குள்ள குரங்குகள் எத்தனை?

1) 6 2) 4 3) 8


**14.** நாய் ஒன்று கிணற்றுக்குள் விழுந்துவிட்டால் அதன் விளைவாக உடனடியாக நடந்திட வாய்ப்புள்ளது பின்வருவனவற்றுள் எது?

1) உடல் முழுவதும் நனைதல்
2) மரணம் சம்பவித்தல்
3) உரத்துக் குரைத்தல்

**15.** மிகப்பெரிய நான்கிலக்க எண்ணுடன் மிகச் சிறிய ஈரிலக்க எண்ணைக் கூட்டினால் பெறப்படும் எண் யாது?

1) 1 010 2) 10 009 3) 10 098

**16.**




இவ்வுருவில் இனங்காணக் கூடிய முக்கோணிகள் எத்தனை?

1) 15
2) 13
3) 17

- 17 **ஆம்** 18 **ஆம் வினாக்களிற்கு எண்கள் அமைந்துள்ள விதத்தைப் பார்த்து வினாக்குறி இடப்பட்டுள்ள இடத்திற்கு வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.**

**17.**




1) 20 2) 18 3) 19

**18.**




*1) 20* *2) 30* *3) 40*

**19.** வகுப்பில் உள்ள மாணவர்களில் மேசை ஒன்றிற்கு 5 பேர் வீதம் அமர்ந்தால் 2 மேசைகள் மிகுதியாகும். மேசை ஒன்றிற்கு 4 மாணவர்கள் வீதம் அமர்ந்தால் 10 மாணவர்களுக்கு அமர்வதற்கு இடமில்லை எனில் அந்த அறையில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையும் மேசைகளின் எண்ணிக்கையும் முறையே.

(1) 90 மாணவர்கள் 20 மேசைகள்.


(2) 40 மாணவர்கள் 10 மேசைகள்.

(3) 20 மாணவர்கள் 08 மேசைகள்.


www.ikedu.lk

- **20ஆம் 21ஆம் வினாக்களில் ஒளிபுகக்கூடிய தாளில் வரையப்பட்ட உருக்களை முறிகோட்டின் மடிக்கும் போது தோன்றும் உருவம் எது?**

**20.**




**21.**




**22.** கலைநிகழ்வொன்றில் பங்குபற்றிய பெண்களின் எண்ணிக்கை, ஆண்களின் எண்ணிக்கையைப் போல் இரு மடங்காகும். அந்நிகழ்வில் பங்குபற்றிய சிறுவர்களின் எண்ணிக்கை, பெண்களின் எண்ணிக்கையைப்போல் இருமடங்காகும். ஆகவே, அந்நிகழ்வில் அதிகமாகப் பங்குபற்றியோர்.

1. பெண்கள் 2. சிறுவர்கள் 3. ஆண்கள்

**23.** பாற்போத்தல் ஒன்றின் விலை ரூபாய் 30.00 ஆகும். வெற்றுப் போத்தலின் விலையை விட பாலின் விலை ரூபாய் 14.00 அதிகமாகும். ஆகவே, பாலின் விலை யாது?

1. ரூபாய் 14.00 2. ரூபாய் 8.00 3. ரூபாய் 22.00

**24.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **1** | **8** | **8** | **8** | **8** | **1** |
| **1** | **8** | **9** | **9** | **8** | **1** |
| **1** | **1** | **0** | **8** | **1** | **1** |

இக்கட்டத்திலுள்ள மூன்று இலக்கங்களையும் தலைகீழாகப் பார்க்கும் போது ஒன்று வித்தியாசமாக இருக்கும் அது எது?


1) 1 8 8 8 8 1 2) 1 8 9 9 8 1

3) 1 1 0 8 1 1


**25.** **✸ = 1, ⊗ = 9, # = 0, ☒ = 6** எனின் இந் நான்கு குறியீடுகளையும் பயன்படுத்தி ஆக்கக் கூடிய மிகக்குறைந்த பெறுமதியுள்ள எண்?

1) ✸ ⊗ ☒ # 2) ✸ # ☒ ⊗ 3) ⊗ ☒ ✸ #

**26.**



மேற்படி தகவல்களின் படி பின்வரும் பழக் கூடைகளில் அதிக பணம் கொடுத்து வாங்கியவர் யார்?



1) பூஜா 2) பாமா 3) மாலா

**27.** கட்டத்தில் 4 முதல் 95 வரையிலான எண்கள் உள்ளன. இவ்வெண்களை பொது வித்தியாசம் 7 ஆக அமையுமாறு கோலமொன்றை உருவாக்க இன்னும் மூன்று எண்கள் தேவைப்படுகின்றன. அவ்வெண்கள் எவை?

| | | | |
|---|---|---|---|
| **4** | **67** | **74** | |
| **53** | **95** | **39** | **18** |
| | **25** | **88** | **32** | **46** |

1) 12, 60, 87 2) 13, 61, 89 3) 11, 60, 81

**28.** 1ஆம் மாதம், 2ஆம் மாதம் என இலக்கமிடப்பட்ட 12 மாதங்களின் இலக்கங்களையும் வார நாட்களின் மொத்த எண்ணிக்கை குறிக்கும் இலக்கத்தையும் கூட்டி ஐம்பூதங்களின் எண்ணிகையினால் வகுக்கும் போது வரும் விடை யாது?

1) 15 2) 17 3) 18

- **அறிவுறுத்தலைப் பின்பற்றி 29 ஆம், 30ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

| நிரல் 1 | நிரல் 2 | நிரல் 3 |
|---|---|---|
| **டீ** | ◊ | **ற** |
|  | **ஆ** | **சூ** |
| ⊗ | **6** | ☒ |

மேற்படி அட்டவணையில் முதலாம் நிரலிலுள்ளவற்றை இரண்டாம் நிரலுக்கும் இரண்டாம் நிரலிலுள்ளவற்றை முதலாம் நிரலுக்கும் மாற்றுக.

**29.** மாற்றம் செய்த பின்னர் அட்டவணையின் மத்தியில் இருப்பது

1) எழுத்து 2) இலக்கம் 3) திண்மவுரு

**30.** ஆரம்பத்தில் இலக்கம் 6 இருந்த இடத்தில் மாற்றத்தின் பின் உள்ளது

1) ☒ 2) ⊗ 3) ஆ

**31.** கண்ணன் எட்டு என்ற எண்னை 8 தடவை பயன்படுத்தி விடையாக 1000 ஐப் பெற முயற்சி செய்தான். அவ்வாறு பெறுவதற்கு அவன் அடுக்கிய சரியான ஒழுங்கைக் காட்டுவது எது?


1)
8 8
8 8
8 8
8
8

2)
8 8 8
8 8
8 8
8

3)
8 8
8 8 8
8
8
8

www.lkedu.lk

32.




இலக்கம் 4 இருக்கும் முகத்திற்கு எதிர்ப்பக்கத்தில் இருக்கும் முகத்தில் இருக்கும் இலக்கம் யாது?

1) 2 2) 6 3) 1

33. கோடைகாலத்தில் தாகம் அதிகமாக இருக்கும் இதற்கான காரணமாக அமைவது

1) சூழலில் அதிகளவு பழங்களைக் காண்பதால் ஏற்படும் ஆர்வம்
2) உடலிலிருந்து பல்வேறு வழிகளில் நீர் அதிகளவு வெளியேறுகின்றமை
3) கொண்டாட்டங்கள் அதிகளவில் இடம்பெறுகின்றமை

34. A இன் மகன் B. X உம் Y உம் சகோதர்கள். A இன் சகோதரர் X எனின், B க்கு Y என்ன உறவு முறை?

1) அண்ணா 2) மகன் 3) பெரியப்பா

- **35ஆம் 36 ஆம் வினாக்களுக்கு கீழ் உள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.**



35. வட்டவடிவ அலங்காரம் ஒன்றை அமைப்பதற்காக நூலொன்றில் அலங்காரக் கொடிகள் ஒட்டப்பட் டுள்ளன. இவற்றினை வட்டமாக அமைக்கும் போது  இவ் உருவிற்கு எதிரே இருக்கும் உரு எது?

1)  2)  3) 

36. இவ் உருவை வட்டமாக அமைக்கும் போது வரும் பொருத்தமான உரு எது?

1) 


2) 

3) 

37. மாலதி ஏணியொன்றின் 9ஆவது படியில் நிற்கின்றாள். மேலும் இருபடிகளில் ஏறும் போது நடுவில் நிற்பதாகக் கூறுகிறாள் எனின் அவ்வேணியிலுள்ள படிகள் எத்தனை?

1) 19 2) 21 3) 23

- 38**ஆம்** 39**ஆம் வினாக்களுக்கு பின்வரும் உருவை அவதானித்து விடை தருக.**



38. மேலே உள்ள இப்பெரிய கனக்குற்றியானது சமமான சிறிய கனக்குற்றிகளால் அடுக்கப்பட்டுள்ளது. இவ்வுருவில் உள்ள சிறிய கனக்குற்றிகள் எத்தனை?
1) 12 2) 14 3) 9

39. இப் பெரிய கனக்குற்றியில் சுற்றிவர வர்ணம் பூசப்பட்டிருப்பின் இரண்டு பக்கங்கள் மாத்திரம் நிறம் பூசப்பட்ட கனக்குற்றிகள் எத்தனை?
1) 3 2) 2 3) 4

40. சிற்றுண்டிச் சாலை ஒன்றிற்கு சில நண்பர்கள் உணவு உண்பதற்காகச் செல்கின்றனர் , அவர்கள் உண்ட உணவிற்கான செலவு ரூபா 2400 ஆகும். செலவை எல்லா நண்பர்களும் சமமாகப் பங்கிட விரும்பினர். இவர்களில் இரண்டு நண்பர்களிடம் பணம் இல்லாததினால் ஏனைய நண்பர்கள் ஒவ்வொருவரும் ரூபா 100.00 ஐ மேலதிகமாகச் செலுத்தினர். எனின், சிற்றுண்டிச்சாலைக்குச் சென்ற நண்பர்கள் எத்தனை பேர் ?
1) 6 பேர் 2) 8 பேர் 3) 7 பேர்

***

www.lkedu.lk

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்

## நிகழ்நிலைப் பரீட்சை - 4

## வினாத்தாள் II

| சுட்டெண் :- ..... | தரம் - 5 | 1 மணித்தியாலம் 15 நிமிடம் |
|---|---|---|

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்.

**பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்கான அறிவுறுத்தல்கள்.**

- உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும், உங்கள் சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே தருக.

## விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் | |
| இறுதிப்புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | பெயரும் ஒப்பமும் |
|---|---|
| முதலாவது பரீட்சகர்<br>புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்படுள்ளது. என உறுதிப்படுத்துகின்றேன். | .....<br>பெயர்<br>.....<br>ஒப்பம் |
| இரண்டாவது பரீட்சகர்<br>முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | .....<br>ஒப்பம் |
| மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிபடுத்தும் பரீட்சகர்<br>மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | .....<br>பெயர்<br>.....<br>ஒப்பம் |
| அதிபர்<br>மேற்பார்வை செய்தேன் | |
| வலய/மாகாண மேற்பார்வையாளர் | |

www.ikeu.lk

1. பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

நாங்கள் பூக்களில் உள்ள தேனைக் குடிப்பவர்கள். எங்கள் குடும்பம் மிகவும் பெரியது. அழகிய நந்தவனமே எங்கள் இருப்பிடம். நீண்ட நாட்களாக நாங்கள் ஒற்றுமையாக அந்த நந்தவனத்தில் வசித்து வந்தோம். வண்ண வண்ணப் பூக்களின் மணமும் எமது அழகும் காண்போரைப் பரவசப்படுத்தும். அண்மையில் நாங்கள் குடியிருந்த நந்தவனம் சில மனிதர்களால் அழிக்கப்பட்டது. இதனால் எமது உறவினர்கள் வெவ்வேறு திசைகளை நோக்கிப் பிரிந்து சென்றுவிட்டனர்.

- **பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i) இப்பந்தியில் கூறப்பட்ட பிராணியின் பெயரின் கீழ்க் கோடிடுக.
1) கிளி 2) வண்ணத்துப்பூச்சி 3) குருவி

ii) காண்போரைப் பரவசப்படுத்துபவற்றில் ஒன்றினை எழுதுக.

.....

iii) பெயரடைமொழிச் சொல் ஒன்றினை எழுதுக.

.....

iv) சேய்மையில் என்பதன் எதிர்க் கருத்தினை எழுதுக.

.....

v) அடுக்குத் தொடரினை எழுதுக.

.....

vi) தன்மைப் பன்மை இறந்த கால வினைச் சொல்லினை எழுதுக.

.....

2. **சரியாக எழுதப்பட்ட சொல்லின் கீழ்க் கீறிடுக.**

அ) 1) சக்கரவத்தி 2) சர்க்கரவத்தி 3) சக்கரவர்த்தி

ஆ) 1) பொறுப்பாளி 2) பொறுப்பாலி 3) பொருட்பாளி

3. **கீழே தரப்பட்ட சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக்குக.**

பொருள் / உண்டு / தமிழில் / ஒரு / தருவதும் / சொல்லாகிப் / எழுத்து / ஓர்

.....

4. **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுக**.

i) நாம் இயற்கையை இரசித்தபடி கொழும்பு நகரை வந்தடைந்தேன். ( )

ii) ஆண்டுகள் பல வேகமாகக் கடந்தோடியது. ( )

iii) பசிய இலைகளை நான் உணவாக உண்டேன். ( )

iv) ஒவ்வொரு கதிரும் முற்றி விளைந்திருந்தது. ( )

5. **பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.**

அன்வர் பெருநாள் தினம் என்ன செய்வீர்கள்

6. i) **பின்வரும் விடுகதைக்கான விடையினை எழுதுக.**

நீட்டிக்கொண்டு நீளமாகவும் படுப்பேன்.
சுருட்டிக் கொண்டு மூலையிலும் நிற்பேன். நான் யார்?

.....



www.ikedu.lk

ii) பின்வரும் கருத்தினைத் தரும் பழமொழியை எழுதுக.
"காலம் மாறிமாறிவரும்"

……..

7. பின்வரும் தொடர்மொழிக்குப் பொருத்தமான தனிச் சொல்லை எழுதுக.
கடவுள் இல்லை எனக் கூறுபவன்.

……..

8. பின்வரும் பாடலைப் பூரணப்படுத்துக.
வளர்ந்து பின்னர் நீயுமே
..... அடைந்ததும்
..... உழைத்திடு
தக்க வாழ்வு கிடைக்குமே

9. பின்வரும் பிராணியின் தொனிக்குரிய மரபுச் சொல்லை எழுதுக.

தவளை கத்தும் என்பது போல பல்லி .....

10. சரியான விடையைத் தெரிந்து கோடிடுக.

i) "ஓடிச் சென்ற கந்தன் கால் தடுக்கிக் கீழே விழுந்தான்", என்ற வாக்கியத்தில் உள்ள இடையின மெய் எழுத்துக்கள் எத்தனை?
1) 3 2) 1 3) 2


ii) பலத்த சூறாவளியால் மரக்கிளைகள்..... என முறிந்து விழுந்தன.
1) சடசட 2) மளமள 3) வெடுவெடு

iii) ஒரு சொல்லில் நிதமும் இருப்பவை
1) எழுத்தும் கருத்தும்
2) குறிலும் நெடிலும்
3) மெய்யெழுத்துக்களும் உயிரெழுத்துக்களும்

iv) கோபம் என்பதன் எதிர்க்கருத்து
1) சினம் 2) சீற்றம் 3) சாந்தம்

11. தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்கு உரிய **தமிழ்ச்** சொற்களை எழுதுக.
1) Waterfall…… 2) Rainbow……..

12. பின்வரும் படத்திற்குரிய ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

1) 

2) 

..... ….....

13. இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.
1) What ..... you like? (is, do, are)
2) How many flowers ..... there? (are, is, have)

14. சிங்களச் சொல்லின் கருத்தை தமிழில் எழுதுக.
1) பதாதா - .....



www.ikeou.lk

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழில் எழுதுக.

i) உங்களுக்கு மாம்பழம் வேண்டுமா?

.....

16. "எண்பத்தையாயிரத்து எண்பத்தெட்டு" என்பதற்கு முன்னால் உள்ள எண்ணினை எழுதுக.

.....

17.

| | |
|---|---|
| 6 | 9 |
| 0 | 7 |

கட்டத்தில் உள்ள இலக்கங்களைக் கொண்டு ஆக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணிற்கும் மிகச் சிறிய எண்ணிற்கும் இடையிலான வித்தியாசம் யாது? .....

18. தரப்பட்டுள்ள ஒவ்வோர் எண் கோலத்திலும் உள்ள இடைவெளிக்குப் பொருத்தமான எண்ணை எழுதுக.

i) XIX, XVII, XV, .....

ii) 15, 9, 18, 18, 21, 36 .....

19. 


உருவில் $\frac{1}{4}$ பங்கிற்கு நிறம் தீட்டப்பட்டுள்ளது.

நிறம் தீட்டப்படாத கட்டங்களில் 0.5 பங்கிற்கு நிறந்தீட்டிக் காட்டுக.

20. 810 புத்தகங்களை ஒரு பெட்டிக்கு 8 வீதம் பொதி செய்ய வேண்டியுள்ளது.

i) செய்யப்பட்ட பொதிகள் எத்தனை? .....

ii) பொதி செய்த பின்னர் எத்தனை புத்தகங்கள் மீதியாக இருக்கும்? .....

21. 

i) இவ்வடிவத்தினைக் கொண்டு அமைக்கக்கூடிய திண்ம உருவின் பெயர் யாது?

.....

ii) உச்சிகளினதும், விளிம்புகளினதும் கூட்டுத் தொகை யாது?

.....

**22. மு.ப 10.25 இற்கு ஆரம்பித்த சிரமதானம் பி.ப 1.20 இற்கு நிறைவடைந்தது.**


i) சிரமதானத்திற்குச் செலவாகிய நேரம் யாது?

..... மணித்தியாலம் ..... நிமிடங்கள்

ii) சிரமதானம் ஆரம்பித்த நேரத்தினை இருபத்துநான்கு மணித்தியாலயக் கடிகாரத்திற்கேற்ப எழுதுக. .....

www.lkedu.lk

23.




i) பென்சில் A இன் நீளத்தினை எழுதுக.

……cm

ii) A,B பென்சில்களின் நீளங்களுக்கு இடையிலான வித்தியாசத்தினை மில்லிமீற்றரில் எழுதுக.

.....mm

24. சங்கவி ஓரிடத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்து வடக்கு நோக்கி 50m சென்று தனது இடது பக்கமாகத் திரும்பி 100m சென்று கோயிலை அடைந்தாள். பின்னர் அதிலிருந்து இடது பக்கமாகத் திரும்பி 75m சென்று மீண்டும் இடதுபக்கமாகத் திரும்பி 100m சென்று குறித்த இடத்தை அடைந்தாள்.

i) சங்கவி பயணத்தை ஆரம்பித்த இடத்திற்கும் தற்போது உள்ள இடத்திற்கும் இடையிலான தூரம் யாது?

……

ii) பயணத்தை ஆரம்பித்த இடத்திலிருந்து கோயில் எத்திசையில் உள்ளது?.....

25. 4லீற்றர் 800 மில்லிலீற்றர் நீர் நிரப்பக்கூடிய தொட்டி ஒன்றில் $\frac{1}{3}$ ற்கு நீர் ஊற்றப்பட்டுள்ளது. அத்தொட்டியை முழுமையாக நிரப்புவதற்கு மேலும் எவ்வளவு நீர் தேவை?

.....l.....ml

26. பின்வரும் சிட்டையைப் பூர்த்தி செய்க.

| பொருள் | 1 kg இன் விலை | | அளவு | விலை | |
|---|---|---|---|---|---|
| | ரூபாய் | சதம் | | ரூபாய் | சதம் |
| அரிசி | 110 | 00 | 1500g | ……. | ……. |
| பருப்பு | …… | ……. | 300g | 18 | 00 |
| சீனி | 145 | 00 | 500g | ……. | …….. |
| மொத்தம் | | | | ……. | …….. |

27.


| தோட்டம் | பலா | மா | வாழை |
|---|---|---|---|
| எண்ணிக்கை | **1235** | **999** | **2022** |

தோட்டம் ஒன்றில் உள்ள பயிர் வகைகளின் விபரம் அருகே தரப்பட்டுள்ளது.

1) தோட்டத்திலுள்ள பயிர்களின் மொத்த எண்ணிக்கை யாது? ……


2) தோட்டத்திலுள்ள பலா , மா ஆகியவற்றின் கூட்டுத்தொகையானது வாழையின் எண்ணிக்கையை விட எத்தனை அதிகம்?

……

28.  இச்சதுரத் தளவடிவத்தில் எத்தனை சமச்சீர்க் கோடுகளை வரையலாம்?

.....

29. மாணவர்கள் குழுவொன்று அதிகமாக விரும்பும் காலை உணவு தொடர்பான தகவல்கள் வரைபில் காட்டப்பட்டுள்ளன.




i) மிகக் கூடுதலான உணவை விரும்பும் மாணவர்களுக்கும் தோசையை விரும்பும் மாணவர்களுக்கும் இடையிலான வித்தியாசம் யாது?.....

ii) இட்லியை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை 11 ஆகும். இதனை வரைபில் வரைந்து காட்டுக.

- **30 தொடக்கம் 59 வரையிலான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30. "எனது உள அமைதியை எனது வீட்டாருக்கும் என்னால் பகிர்ந்தளிக்கமுடியும்" இது மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாட்டின்
1) 3ஆம் படிமுறை 2) 5ஆம் படிமுறை 3) 1ஆம் படிமுறை

31. உணவாகப் பயன்படும் இலைகளைக் கொண்ட தொகுதி.
1) பசளி, மா, பாகல் 2) அகத்தி, பூசணி, வல்லாரை
3) வல்லாரை, பொன்னாங்காணி, முருங்கை

32. பின்வருவனவற்றுள் ஊனுண்ணி எது?
1) கோழி 2) தும்பி 3) பூனை

33. பின்வருவனவற்றில் இலங்கைக்கே உரித்தான முலையூட்டி எது?
1) கலவத்தன் 2) புலத்ஹய்யா 3) சபன்கோழி

34. உலக மரபுரிமையாக கணிப்பும் பெற்றுள்ள இடம்
1) சிங்கராசவனம் 2) கசூர்னா கடற்கரை 3) காலிக்கோட்டை

35. தேசிய இலச்சினை பொறிக்கப்பட்டுள்ள ஆவணங்களை மாத்திரம் கொண்டமைந்த விடை
1) கடவுச்சீட்டு, தேசிய அடையாள அட்டை, மாவட்டச் செயலகம்
2) பொலீஸ் நிலையம், மாவட்டச் செயலகம், பிறப்புச் சான்றிதழ்
3) பிறப்புச் சான்றிதழ், கடவுச் சீட்டு, அடையாள அட்டை

36. கண்டி தலதாமாளிகையில் தியவடனே நிலமே ஆகப் பதவி வகித்தவர்
1) கொங்காலேகொட பண்டா 2) கெப்பெட்டிப் பொல திசாவ
3) வண.எஸ்.மகிந்த

37. அனல்மின் உற்பத்திக்குப் பயன்படும் மூலப்பொருள்
1) சூரியஒளி 2) டீசல் 3) நிலக்கரி

www.ikeuk


38. நீர் ஊற்றுக்கள் வற்றாது பாதுகாக்கப் பயன்படும் மரம்
1) இலுப்பை மரம் 2) மருதமரம் நாவல் மரம்

39. மரமுந்திரிப் பழத்தில் அதிகளவு அடங்கியுள்ள போசணைக் கூறு
1) விற்றமின் D 2) விற்றமின் C 3) விற்றமின் B

40. ஒளடதப் பயன்பாட்டின்போது கவனத்தில் கொள்ளவேண்டிய முக்கிய விடயம்
1) மருந்தின் நிறம் 2) தயாரித்த நிறுவனம் 3) பருக வேண்டிய அளவு

41. இலங்கையில் மரச்செதுக்கல் வேலைப்பாட்டிற்கு புகழ்போன தேவாலயம் அமைந்துள்ள மாவட்டம்.
1) கண்டி 2) மாத்தளை 3) மொனராகல

42. அசுத்தமான நீரைப் பருகுவதால் ஏற்படக்கூடிய நோய் அல்லாதது
1) கல்லீரல் அழற்சி 2) மஞ்சட்காமாலை 3) குடற்புண்நோய்

43. 

அருகிலுள்ள மின்சுற்றிலுள்ள மின்குமிழ்
1) ஒளிரும்
2) ஒளிராது
3) கூறமுடியாது

44. "நாளாந்த வாழ்க்கையில் நாம் பயன்படுத்திய பின் கழித்தொதுக்கும் பொருள்களை, மீளப் பயன்படுத்தக்கூடிய நிலைக்கு மாற்றுதல் என்பது 3R எண்ணக்கருவில் எதனுள் அடங்கும்
1) பயன்பாட்டைக் குறைத்தல் 2) மீளப் பயன்படுத்தல்
3) மீள் சுழற்சிப்படுத்தல்

45. நிறமூட்டப்பட்ட நீர் உள்ள கண்ணாடிக்குவளைக்குள் பனிக்கட்டியை இட்டபோது யாது நிகழாது.
1) கண்ணாடிக் குவளையின் வெளிப்புறத்தில் நிறமுள்ள நீர்த்துளிகள் படிந்திருக்கும்
2) கண்ணாடிக் குவளையின் வெளிப்புறத்தில் நீர்த்துளிகள் கீழே வடியும்
3) கண்ணாடிக் குவளையின் வெளிப்புறத்தில் நீர்த்துளிகள் படிந்திருக்கும்

46. "ஆனகட்டி ஏலேலப்படி சேர்குழப்பி....." இது எவ்வகைப் பாடல்
1) மீனவர் பாடல் 2) சேனைப் பாடல் 3) உழவர் பாடல்

47. முற்காலத்தில் வீட்டுத் தோட்டச் செய்கையில் பயிர்களின் பாதுகாப்பிற்காக கையாண்ட பாரம்பரியமான உத்திகளில் அடங்காதது.
1) தடிவேலி அமைத்தல்
2) சாம்பல் இடல்
3) இரசாயனக் கிருமிநாசினி தெளித்தல்

48. இலங்கையின் கரையோரப் புகையிரதப் பாதையாக அமைவது
1) கொழும்பிலிருந்து மாத்தறைக்கானது
2) கொழும்பிலிருந்து மட்டக்களப்பிற்கானது
3) கொழும்பிலிருந்து அவிசாவளைக்கானது
4)

49. அதிகளவு நீரை தேக்கிவைக்கக்கூடிய மண்
1) மணல் மண் 2) களி மண் 3) தோட்ட மண்

50. வீதியில் சாரதி வாகனத்தை செலுத்த வேண்டிய பக்கம்
1) வலப்பக்கம் 2) இடப்பக்கம் 3) நடுப்பக்கம்

www.lkedu.lk

51. நாம் தேசிய மரபுரிமைகளைப் பாதுகாப்பதனால் நாட்டிற்கு கிடைக்கும் நன்மை அல்லாதது
1) நாட்டின் தனித்துவம் பாதுகாக்கப்படும்
2) பண்பாட்டை சந்ததியாகக் கையளிப்பது இலகுவாகும்
3) பண்பாட்டுப் பெறுமானம் நாளுக்குநாள் குறைவடையும்

52. காற்றின் மூலம் பரம்பலடையும் வித்துக்களை மாத்திரம் கொண்ட விடை.
1) முருங்கை, சீதேவியார் செங்கழுநீர், எருக்கலை
2) சீதேவியார் செங்கழுநீர், இலவம் பஞ்சு, துத்திரி
3) முருங்கை, ஆடையொட்டி, கமுகு

53. பிராணிகளின் அழிவிற்கு மனிதனால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை
1) காடுகளைப் பாதுகாத்தல்
2) இரசாயனப் பசளை, பூச்சி கொல்லிகளைப் பயன்படுத்தல்
3) பிராணிகளை வேட்டையாடாதிருத்தல்

54. வீட்டில் நாம் தனியாகப் பயன்படுத்தும் பொருட்கள் அடங்கிய கூட்டம்
1) சவர்க்காரம், உணவுத்தட்டு, வானொலி
2) தலையணை, துவாய், பற்தூரிகை
3) உணவுத்தட்டு, தேநீர்க்கோப்பை, தொலைக்காட்சி

55. பல்கூட்டுச் சந்தைகளில் பணக்கொடுக்கல் வாங்கல் செய்யப்படும் முறை அல்லாதது
1) கடனட்டை 2) வீசா அட்டை 3) குடும்ப அட்டை

56. உடன் உணவுகளை அதிகம் உண்பதால் ஏற்படக்கூடிய பாதிப்பு
1) சுகாதாரத்திற்கு நல்லது
2) உடல் நிறை அதிகரித்தல்
3) போசாக்கானதாக இருத்தல்

57. சமூக விரோதச் செயல் அல்லாதது
1) போதைப் பொருள் விற்பனை
2) சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல்
3) சிறுவர்களைப் பாடசாலைக்கு அனுப்புதல்

58. பொது இடங்களில் மனிதர்களுக்கு ஏற்படும் அசௌகரியம்
1) பஸ் வண்டியில் உரத்த சத்தத்துடன் பாடல்கள் ஒலித்தல்
2) வரிசையாக நின்று செல்லுதல்
3) வெள்ளைக் கோட்டின் ஊடாகப் பாதையைக் கடத்தல்

59. மருந்தாகப் பயன்படும் வேர்
1. நன்னாரி 2) கத்தரி 3) மா

60) இந்த ஆண்டிற்கான "சிறந்த மாணவர் விருதுக்காக நீர் தெரிவு செய்யப்பட்டுள்ளீர்" எனக் காலைக்கூட்டத்தில் உமது அதிபர் அறிவிக்கின்றார். அச்சந்தர்ப்பத்தில் உமது மனதில் தோன்றிய உணர்வுகளைக் கொண்டதாக மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டல்களும் சரியாக இருத்தல் வேண்டும்.)

i) .....

.....

ii) .....

.....

iii) .....

.....

***

www.keau.lk

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்

**தரம் 5** **நிகழ்நிலைப் பரீட்சை 4** **விடைத்தாள்**

## புள்ளித்திட்டம்

**வினாத்தாள் I (விடைகள்.)**

| | | | |
|---|---|---|---|
| **1. 2** | **2. 3** | **3. 1** | **4. 3** |
| **5. 3** | **6. 2** | **7. 2** | **8. 3** |
| **9. 1** | **10.3** | **11.2** | **12.1** |
| **13.2** | **14.1** | **15.2** | **16.1** |
| **17.1** | **18.1** | **19.1** | **20.1** |
| **21.1** | **22.2** | **23.3** | **24.2** |
| **25.2** | **26.2** | **27.3** | **28.2** |
| **29.3** | **30.2** | **31.3** | **32.1** |
| **33.2** | **34.3** | **35.2** | **36.2** |
| **37.2** | **38.1** | **39.2** | **40.2** |

**வினாத்தாள் II (விடைகள்)**

01. 1) வண்ணத்துப்பூச்சி
    2) வண்ண வண்ணப் பூக்களின் மணம் / வண்ணத்துப் பூச்சிகளின் அழகு
    3) அழகிய / நீண்ட
    4) அண்மையில்
    5) வண்ண வண்ண
    6) வந்தோம்
    (6 புள்ளிகள்)

02. 1) சக்கரவர்த்தி
    2) பொறுப்பாளி
    (2 புள்ளிகள்)

03. தமிழில் ஓர் எழுத்து ஒரு சொல்லாகிப் பொருள் தருவதும் உண்டு. (1 புள்ளி)

04. 1) (**x**)
    2) (**x**)
    3) (✓)
    4) (✓) (4 புள்ளிகள்)

05. அன்வர், பெருநாள் தினம் என்ன செய்வீர்கள்? (1 புள்ளி)

06. i) பாய் (1 புள்ளி)
    ii) ஆனைக்கொரு காலம், பூனைக்கொரு காலம் (1 புள்ளி)

07. நாத்திகன் (1 புள்ளி)

08. 1) வாலிபத்தை
    2) தளர்ந்திடாமல் (2 புள்ளிகள்)

09. சொல்லும் (1 புள்ளி)

10. 1) 1 (1 புள்ளி)
    2) சடசட (1 புள்ளி)
    3) எழுத்தும் கருத்தும் (1 புள்ளி)
    4) சாந்தம் (1 புள்ளி)

11. 1) நீர்வீழ்ச்சி 2) வானவில் (2 புள்ளிகள்)

12. 1) Star 2) Brinjal (2 புள்ளிகள்)


13. 1) do 2) are (2 புள்ளிகள்)

www.lkedu.lk

14. 1) புதன் (1 புள்ளி)
15) ஒயாட்ட அம்ப ஓனத? (1 புள்ளி)

16. 85087 (2 புள்ளிகள்)

17. 3681 (2 புள்ளிகள்)
18. 1) XIII 2) 24 (2 புள்ளிகள்)
19. மேலும் 3 கட்டங்கள் நிறந்தீட்டப்படல் வேண்டும்.



(2 புள்ளிகள்)

20. 1) 101
    2) மீதி 2 (2 புள்ளிகள்)
21. 1) நான்முகி
    2) 10 (2 புள்ளிகள்)
22. 1) 2 மணித்தியாலங்கள் 55 நிமிடங்கள்
    2) 10:25 (2 புள்ளிகள்)
23. 1) 5.5cm
    2) 5mm (2 புள்ளிகள்)
24. 1) 25m
    2) வடமேற்கு (2 புள்ளிகள்)
25. 3ட 200*ml* (2 புள்ளிகள்)
26. 1) ரூ165.00
    2) ரூ 60.00
    3) ரூ 72.50
    4) ரூ 255.50 (4 புள்ளிகள்)
27. 1) 4256 2) 212 (2 புள்ளிகள்)
28. 4 (2 புள்ளிகள்)
29. 1) 8
    2) வரைதல் வேண்டும்-11 (2 புள்ளிகள்)

| | | |
|---|---|---|
| 30) 2 | | |
| 31) 3 | 41) 1 | 51) 3 |
| 32) 2 | 42) 3 | 52) 1 |
| 33) 1 | 43) 1 | 53) 2 |
| 34) 1 | 44) 3 | 54) 2 |
| 35) 3 | 45) 1 | 55) 3 |
| 36) 2 | 46) 2 | 56) 2 |
| 37) 3 | 47) 3 | 57) 3 |
| 38) 2 | 48) 1 | 58) 1 |
| 39) 2 | 49) 2 | 59) 1 |
| 40) 3 | 50) 2 | (30 புள்ளிகள்) |

60 இந்த ஆண்டிற்கான "சிறந்த மாணவர் விருதுக்காக நீர் தெரிவு செய்யப்பட்டுள்ளீர்" எனக் காலைக்கூட்டத்தில் உமது அதிபர் அறிவிக்கின்றார். அச் சந்தர்ப்பத்தில் உமது மனதில் தோன்றிய உணர்வுகளைக் கொண்டதாக மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டல்களும் சரியாக இருத்தல் வேண்டும்.)
(6 புள்ளிகள்)

- வாக்கியத்தில் ஓர் எழுத்துப்பிழை மட்டும் இருப்பின் ஒரு புள்ளி வழங்கவும். அதற்கு மேல் பிழை எனின் புள்ளி வழங்க வேண்டாம்.

- உறுப்பமையவும் தெளிவாகவும் இருப்பின் முழு வினாத்தாளையும் கருத்திற் கொண்டு 2 புள்ளிகள் வழங்குக.

www.lkedu.lk